அதைத் தண்டிக்கக் கூடிய விதத்தில் அமைந்து விடாமல் அங்கே பதிவு செய்தவர்களுக்கும் ஓய்வு ஊதியம் தர மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே முதலிலே இருந்தது பாவம் என்று நண்பர் சொல்லக் கூடாது. இங்கே வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறோம், இணைந்ததற்காகப் பாராட்டுகிறோம், வாழ்த்து கிறோம். இங்கே வந்து விட்டார்கள் என்பதற்காக அரசு தண்டிக்கவும் இல்லை. இந்த மாநிலத்திலே அவர்கள் பதிவு செய்யவில்லை என்றுதான் நான் சொன்னேன். இந்த மாநிலத்திலே பதிவு செய்கிறவர்களுக்குத்தான் ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு அரசு வழி வகைகள் வகுத்திருக்கிறது. வெளி மாநிலத்திலே பதிவு செய்தவர்களுக்கு ஓய்வு ஊதியம் தர அரசின் விதி முறைகள் இடம் தரவில்லை என்றுதான் நான் தெரிவித்தேன்.

தலைமைச் செயலகத்தில் இணைப்புக் கட்டிடம் கட்டுதல்.

45—(* வினா எண் 6104) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தில் துறைகள் விரிவாக்கப் பட்டதின் விளைவாக புதிய பலமாடிக் கட்டிடத்திற்கு இணையாக கட்டிடம் ஒன்றினைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்பட அரசாங்கம் அதற்குத் திட்ட மதிப்பீடு என்று எவ்வளவு வைத்திருக்கிறது? எத்தனை காலத்திற்குள் இந்தப் பணியை முடிக்க அரசு எண்ணியுள்ளது என நான் அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான தகவல்கள் ஏதும் தயாரிக்கப் படவில்லை. ஆனால் இப்போது கட்ட வேண்டும் என்று நாம் நினைக்கிற அந்த இடத்தை இராணுவத்திடமிருந்து பெற வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அந்தக் கட்டிடத்தை முறையாகக் கட்ட முடியும். எனவே அந்த இடத்தைப் பெற்றுக் கொண்டுதான் அதைப் பற்றி ஆய்வு செய்து முழுமையான விவரங்களைத் தர முடியும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி மாநகரத்திலே ஒவ்வொரு துறையைச் சார்ந்த அமைச்சர்களும், அவர்களுடைய சம்பந்தப்பட்ட துறைகளும் ஒரே இடத்திலே, ஒரே கட்டிடத்திலே இயங்கி வருவதைப் போல நம்முடைய தமிழ்நாட்டிலேயும் தமிழ்நாடு அமைச்சர்களும் அந்தந்தத் துறைகளும் அதன் அலுவலகங்களும் ஒரே கட்டிடத்தில் இயங்குகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களோ, பொது மக்களோ பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். அப்படிப் பட்ட திட்டத்தை வரும் ஆண்டிலே செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே மின்சார வாரிய அலுவலகம் அதே மாதிரி இயங்கி வருகிறது. அதைக் கணக்கில் வைத்து வரும் ஆண்டிலே இதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி ஒருமுறை விவாதிக்கிற போது தனித்தனிக் கட்டிடமாக இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு அமைச்சரும், அவருக்குப் பின்னால் செயலாளர்கள், அவர்களுக்குண்டான அலுவலர்கள் அத்தனை பேரும் இருக்கிற வகையில், கட்டிடம் அமைய வேண்டுமென்றும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், இப்போது நமக்கு இருக்கிற சூழ்நிலையில் அப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு பல கோடி ரூபாய் செலவாகும் என்றிருக்கிற காரணத்தால்தான் தனித்தனிக் கட்டடத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, இப்போது புதிய மாடிக் கட்டிட மான 10 மாடிக் கட்டிடம் கட்டியதில் ஏறத்தாழ 30 துறைகள்

இயங்கி வருகின்றன. பிரதான கட்டடமாக இருக்கிற இந்தப் பழைய கட்டடத்தில் ஏறக்குறைய 9 துறைகள் இயங்கி வருகின்றன. எனவே இடம் போதாமல் இருக்கிறது. அதற்கு இன்னும் ஒரு பல மாடிக் கட்டிடம் கட்ட வேண்டுமென்ற முயற்சியை அரசாங்கம் இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டப்படுகிறபோது ஓரளவிற்கு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு வசதியான இடத்தில் அதிகாரிகள் பணியாற்றுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே அரசினுடைய எண்ணம் அப்படிப்பட்டதாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கு போதிய பண வசதிகள் இப்போது இல்லாமல் இருக்கிற காரணத்தால் படிப்படியாக அதைச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தை மாற்றி வேறு இடத்தில், புதிய திட்டங்களோடு கட்டப்படுமென்று சொல்லப்பட்டதே, அது எப்போது நடை முறைப்படுத்தப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அது ஒரு பெரிய விவாதமாக நடந்து கொண்டிருந்த பிரச்சினை. தலைமைச் செயலகத்தை எங்கே மாற்றுவது என்பதைப் பற்றி இப்போது விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஒரு புதிய கூடுதல் கட்டடத்தை கட்டுவதைப் பற்றிய வினா இது. எனவே அதற்கு மட்டும்தான் பதில் சொல்ல முடியும்.

மணிமுத்தாறு நதியில் மணலூருக்கு அருகில் தரைப்பாலம்.

46—(*வினா எண். 11570) திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவம்பார் பகுதியை விருத்தாசலத்துடன் இணைக்க மணிமுத்தாறு நதியில் மணலூருக்கு அருகில் தரைப்பாலம் அமைக்கக் கோரி மனு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?